செ.வெ.எண்: 01/2021 நாள்: 01.09.2021

# தமிழக அரசு அறிவித்துள்ள கோவிட்-19 நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி பாதுகாப்புடன் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு வகுப்புகள் நடைபெற வேண்டும்.

## திருப்பூர் மாநகராட்சி நஞ்சப்பா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

திருப்பூர் மாநகராட்சி நஞ்சப்பா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், தமிழக அரசு அறிவித்துள்ள கோவிட்-19 நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி பாதுகாப்புடன் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு வகுப்புகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.09.2021) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை கோவிட்-19 நிலையான நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சுகாதாரம் மற்றும் தூய்மையுடன் பாதுகாப்பாக வகுப்புகள் இன்று (01.09.2021) முதல் நடைபெற தமிழக அரசு அறிவித்துள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள 187 அரசுப்பள்ளிகள் மற்றும் 54 தனியார் பள்ளிகளில், அரசு பள்ளிகளில் 66,761 மாணவ, மாணவியர்களும், தனியார் பள்ளியில் 56,135 மாணவ, மாணவியர்களும் பயின்று வருகின்றனர். அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடைபெறுவதையொட்டி கோவிட்-19 நிலையான வழிகாட்டு

நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்ய தனித்தனியாக அனைத்து வட்டத்திலும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, ஒரு வகுப்பறைக்கு 20 மாணவ, மாணவியர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். கோவிட்-19 நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedures) குறித்து பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு தெரிந்திரிப்பதை உறுதி படுத்தி, தெர்மல் ஸ்கேனர் மூலம் மாணவ, மாணவியர்களுக்கு பரிசோதனை செய்து வகுப்பறைக்குள் அனுமதிக்க வேண்டும்.

வகுப்பறையில் மாணவ, மாணவியர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டும். மருத்துவக்குழுவினர் மாணவ மாணவியர்களை பரிசோதனை செய்து நோய்த்தொற்று இல்லை என்பதை உறுதி செய்து, விடுதிகளில் தங்கும் மாணாக்கர்களும், நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedures) பின்பற்றுவதை கண்காணிப்பு அலுவலர்கள் ஆய்வு செய்வார்கள்.

தனியார் பள்ளி / கல்லூரி பேருந்துகள் சுத்தம் செய்து, கிருமி நாசினி தெளித்து மாணவ, மாணவியர்கள் சமூக இடைவெளியினை கடைபிடித்து பயனம் செய்வதை தினந்தோறும் ஆய்வு செய்வார்கள். மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்குவதற்கு தேவையான அளவு ஜிங்க் மற்றும் மல்டி விட்டமின் மாத்திரைகள் இருப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், இன்று முதல் கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வட்டத்திலுள்ள வருவாய் ஆய்வாளர்கள், காவல் உதவி ஆய்வாளர், சுகாதார ஆய்வாளர் மற்றும் உள்ளாட்சித்துறையினர் ஆகியோர் இணைந்து கண்காணிப்பு பணியை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ரமேஷ் அவர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர்மாவட்டம்.**